Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, ஜூன் 20, 2024 | இதழ் 68

## கள்ளக்குறிச்சி சம்பவத்தில் முழு விசாரணை நடத்த நீதிபதி தலைமையில் கமிஷன் அமைப்பு விஷ சாராயம் குடித்து பலியானவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.10 லட்சம் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு



சென்னை, ஜூன் 20, 2024: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தலைமைச் செயலகத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின் சு.முத்துசாமி, மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் 1 நா. முருகானந்தம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் பி.செந்தில்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் குடித்து உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.10 லட்சம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

விஷ சாராய சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்த ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பி.கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைத்திடவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கருணாபுரம் காலனியில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் 34 நபர்கள் உயிரிழந்துள்ளனர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்திட அறிவுறுத்தியுள்ளதோடு, பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து, ஆறுதல் தெரிவிக்க நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து, மீண்டும் இன்று அவர்களுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கள்ளக்குறிச்சிக்குச் சென்றுள்ளார்.

இதுவரை இச்சம்பவத்தில் விஷச்சாராய விற்பனையில் தொடர்புடைய நான்கு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இதில் தீவிர விசாரணை மேற்கொண்டு, குறிப்பாக விஷச்சாராயம் தயாரிக்க மெத்தனாலை வழங்கியவர்களையும் கண்டறிந்து, அவர்கள் மீதும் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இச்சம்பவம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட காவல் துறை அலுவலர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, மாவட்ட கலெக்டரும் பணியிட மாறுதல் செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இது குறித்துத் தீர விசாரிக்கவும், உரிய மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டும், இவ்வழக்கு சிபிசிஐடி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், உயிரிழந்த வர்களின் குடும்பத்ினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இச்சம்பவம் தொடர்பாக, இன்று, அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல் துறை இயக்குநர், கூடுதல் காவல்துறை இயக்குநர் (மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு), மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அலுவலர்கள், கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

* மெத்தனால் கலந்த விஷச்சாராய உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபட்ட அனைவரும் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டுமென்றும், சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மெத்தனால் இருப்பை முழுமையாகக் கண்டறிந்து, அவற்றைக் கைப்பற்றி அழித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும், விஷச்சாராய உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட மெத்தனால் எங்கிருந்து கொண்டு வரப்பட்டது என்பதற்கான மூலகாரணத்தையும் காவல் துறையினர் கண்டுபிடிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

* மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை, பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, சேலம் மற்றும் விழுப்புரம் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டுமென்றும், அங்கு அவர்களுக்குத் தேவையான சிறப்பு சிகிச்சை வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளேன்.

* உள்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் காவல் துறை இயக்குநர் ஆகியோர் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு உடனடியாகச் சென்று, சம்பவம் குறித்து ஆய்வு மேற்கொண்டு அறிக்கை ஒன்றினை இரண்டு தினங்களில் வழங்குவார்கள்.

* கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு, இது நிகழ்ந்ததற்கான அனைத்துக் காரணிகளைக் கண்டறியவும், எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் மீண்டும் நடைபெறாமல் இருக்க, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்கிடவும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பி.கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைத்திட உத்தரவிட்டுள்ளேன். இந்த ஆணையம், சம்பவம் குறித்து முழுமையாக விசாரித்து தனது பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் வழங்கும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

## கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய சாவு ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும்: பலியானோர் குடும்பத்துக்கு ரூ.25 லட்சம் வழங்க வேண்டும் - எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஜூன் 20, 2024: "கள்ளச் சாராய உயிரிழப்புகளுக்கு தார்மீக பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும்" என்று அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரம் சுற்றுவட்டார பகுதியில் விஷசாராயம் குடித்து உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 36 ஆக உயர்ந்துள்ளது. மேலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் புதுச்சேரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், சேலம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு தமிழக அரசின் அலட்சியமே காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். கள்ளக்குறிச்சிக்கு நேரில் சென்ற எடப்பாடி பழனிசாமி பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த எடப்பாடி பழனிசாமி கூறியதாவது: -

கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் கள்ளச்சாராயம் குடித்ததில் 200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தில் 36 பேர் உயிரிழந்துள்ளனர். மருத்துவமனைகளில் 133 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வளவு அதிகமான பேர் பாதிக்கப்பபட்டுள்ளனர் என்பது மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் தருகிறது.

பாதிக்கப்பட்ட அனைவரும் ஏழைகள். மாவட்ட தலைநகரில் காவல் நிலையத்துக்கு பின்புறமே சாராயம் விற்கப்படுகிறது. அப்படியெனில் தி.மு.க. ஆட்சி நிர்வாகம் எப்படி இருக்கிறது என்று பாருங்கள்.

கள்ளச்சாராயத்தால் யாரும் சாகவில்லை என பச்சை பொய் கூறினார் கலெக்டர் ஷ்ரவன் குமார். வயிற்று வலியால், வலிப்பால், வயது மூப்பால் உயிரிழப்பு ஏற்பட்டதாக பொய் கூறினார் கலெக்டர். உண்மையை கூறாமல் தி.மு.க. அரசுக்கு முட்டுக்கொடுக்கும் வேலையை செய்தார் கலெக்டர்.

கள்ளச் சாராய விற்பனைக்கு பின்னால் மிகப்பெரிய கும்பல் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. ஆளுங்கட்சியை சேர்ந்த அதிகாரமிக்கவர்களே இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இல்லையெனில் இவ்வளவு துணிச்சலாக கள்ளச் சாராய விற்பனை நடைபெறுமா?.

கள்ளக்குறிச்சியின் மையப்பகுதியில் கள்ளச்சாராயம் விற்கப்பட்டுள்ளது. கள்ளச்சாராயம் விற்பனை நடந்த இடத்தின் அருகிலேயே காவல்நிலையம் உள்ளது. அதிகாரிகளும், அரசு நிர்வாகமும் கள்ளச்சாராய விற்பனையை தடுக்கவில்லை. அதிகார பலம் கொண்டவர்களின் துணையோடு சாராய விற்பனை நடைபெறுகிறது.

இதற்கு முன் விழுப்புரம், செங்கல்பட்டு பகுதியில் கள்ளச் சாராய மரணங்கள் நிகழ்ந்தபோதே அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்க வலியுறுத்தினேன். ஆனால் ஆளும் அரசு சிபிசிஐடி வசம் வழக்கை ஒப்படைத்தது. ஆனால் யார் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. சம்பவம் நடந்த உடன் வீர வசனம் பேசுகிறார்கள். பிரச்சினை முடிந்த பின் அதோடு விட்டுவிடுகிறார்கள்.

இங்கே சிகிச்சை பெறுபவர்கள் இன்னும் எத்தனை பேர் பலியாவார்கள் எனத் தெரியவில்லை. கள்ளச்சாராய உயிரிழப்புகளுக்கு பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும். கள்ளக்குறிச்சி அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. செந்தில்குமார் கள்ளச்சாராய விற்பனை குறித்து போலீஸ் சூப்பிரண்டிடம் புகார் அளித்தும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் துறை முதல்வர் வசம் உள்ளது. இருந்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழகம் போதைப்பொருள் நிறைந்த மாநிலமாக உள்ளது.

திருச்செங்கோடு அருகே தி.மு.க. நிர்வாகி கள்ளச் சாராயம் விற்பனை செய்கிறார். போதைப்பொருள் விவகாரத்தில் பின்புலமாக தி.மு.க. தான் உள்ளது. கள்ளச்சாராய உயிரிழப்புகளுக்கு தார்மீக பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும். அது தான் பொருத்தமாக இருக்கும்.

மக்கள் மீது அக்கறை இல்லாத அரசு இது. முதல்வர் ஸ்டாலினுக்கு ஆட்சி, அதிகாரம் தான் முக்கியம். வாக்களித்த மக்களோ, நாட்டு மக்கள் மீதோ அவருக்கு கவலை இல்லை.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் நிவாரணமாக வழங்க வேண்டும். கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ. செந்தில்குமார் கள்ளச்சாராய விற்பனை குறித்து கொண்டு வந்த கவன ஈர்ப்பு தீர்மானமும் சட்டப்பேரவையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. கள்ளக்குறிச்சி மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதும் போதைப் பொருள் நடமாட்டம் இருக்கிறது.

பெற்றோர்களை இழந்து வாடும் குழந்தைகளின் கல்வி செலவை அண்ணா தி.மு.க. ஏற்கும். பெற்றோர்களை இழந்து வாடும் குழந்தைகளின் குடும்பங்களுக்கு மாதம் ரூ. 5 ஆயிரம் வழங்கப்படும்.

கள்ளச்சாராய விஷத்தை முறிக்கும் மருந்து தமிழ்நாட்டில் எந்த மருத்துவமனையிலும் இல்லை. கள்ளக் குறிச்சி மருத்துவமனை அண்ணா தி.மு.க. ஆட்சியில் ரூ.400 கோடி செலவில் கட்டப்பட்டது. ஆனால் இந்த அரசு தேவையான மருத்துவர்களை நியமிக்கவில்லை. சென்னையில் இருந்து மருத்துவர்களை அழைத்து வந்து சிகிச்சைகொடுத்து இருந்தால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றியிருக்காலம். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## பால் கொள்முதல் விலையை அதிகரிக்க பரிசீலித்து உரிய நடவடிக்கை: கால்நடை தீவனத்திற்கு உரிய மான்யத்துக்கும் ஏற்பாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ் உறுதி



சென்னை, ஜூன் 20, 2024: சென்னை நந்தனம் ஆவின் இல்லத்தில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள், கூட்டுறவு சங்க பணியாளர்கள், விவசாய பிரதிநிதிகள் உடனான கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாய பிரதிநிதிகள், சங்க பணியாளர்கள், உறுப்பினர்கள் சார்பில் பால் கொள்முதல் விலையை அதிகரிக்கவும், உடனடி ஒப்புகைச்சீட்டை மேலும் விரிவுபடுத்துமாறும், கால்நடை தீவனத்திற்கு மானியம் கோரியும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். கோரிக்கைகள் அனைத்தும் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் சென்னை நந்தனம், ஆவின் இல்லத்தில் மாவட்ட பொது மேலாளர்கள் மற்றும் அனைத்து மாவட்ட துணை பதிவாளர்கள் (பால்வளம்) உடனான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 3 ரூபாய் ஊக்கத்தொகை கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு உடனடி ஒப்புகைச்சீட்டு வழங்குதல், 10 நாட்களுக்கு ஒருமுறை பால்பணம் பட்டுவாடா, கால்நடை தீவனத்தின் தரத்தை உறுதி செய்தல், குறைந்த வட்டியில் கால்நடைக் கடன் என கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக சீர்திருத்த நடவடிக்கையின் மூலம் தற்போது ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு சுமார் 34.42 லட்சம் லிட்டர் பாலை விவசாயகளிடமிருந்து கொள்முதல் செய்து ஒரு நிலையான வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

சென்ற நிதி ஆண்டில் மற்றும் நடப்பு நிதி ஆண்டில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு கறவை மாட்டுக்கடன், கால்நடை பராமரிப்பு கடனாக ரூ. 221 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. பரிசீலனை செய்து கடன் வழங்கவும் உள்ளது.

தற்போது பால் பொருட்கள் விற்பனையிலும் ஆவின் மிகப்பெரிய முன்னேற்றத்தை கண்டுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பால் விற்பனை 23% அதிகரித்துள்ளது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை மொத்த விற்பனையாளராக நியமனம் செய்யப்பட்ட பிறகு தற்போது வரை 1 கோடியே 27 லட்சம் ரூபாய்க்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

துணை மையங்களை சங்கங்களாக பதிவு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும், அனைத்து வகை சங்கங்களிலும் நிலுவையில் உள்ள ஆண்டு இறுதி தணிக்கை பணிகளை இந்த மாத இறுதிக்குள் விரைந்து முடிக்குமாறும் துணைப்பதிவாளர்களிடம் அமைச்சர் அறிவுறுத்தினார்.

பால்வளத்துறை இயக்குநர் அறிவுறுத்தியுள்ளவாறு தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு கணினி மயமாக்கும் பணியினை விரைந்து செயல்படுத்தவும், டிஜிட்டல் சிக்னேச்சர் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆவின் உபபொருட்கள் மற்றும் கால்நடை தீவன விற்பனையை அதிகரிப்பதன் மூலம் சங்கங்களுக்கு அதிக அளவில் வருவாய் வருவதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் பால்வளத்துறை இயக்குநர் சு.வினீத், முதன்மை விழிப்புக்குழு அதிகாரி சே. மேகலினா ஐடன், ஆவின் உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

## சென்னை சத்தியமூர்த்தி பவனில் ராகுல்காந்தி பிறந்தநாள் கொண்டாட்டம்



சென்னை, ஜூன் 20, 2024: காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியின் 54 வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, சென்னை மண்ணடி காளிகாம்பாள் கோவில், சென்னை மயிலாப்பூர் சாந்தோம் தேவாலயம், அண்ணா சாலை தர்கா ஆகியவற்றில் சிறப்பு பிரார்த்தனைகள் மேற்கொள்ளபட்டன. மேலும் அன்னதானம், சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் சென்னை சத்தியமூர்த்தி பவனில் 54 கிலோ எடையுள்ள கேக் வெட்டி, இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. விழாவுக்கு முன்னாள் தலைவர்கள் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், திருநாவுக்கரசர், கே.வீ.தங்கபாலு, கன்னியாகுமரி தொகுதி எம்.பி. விஜய் வசந்த், மாநில துணைத் தலைவர்கள் கோபண்ணா, சொர்ணா சேதுராமன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் ஏழை, எளியோருக்கு ஸ்கூட்டர், தையல் எந்திரம், குக்கர், வேட்டி சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், மருத்துவ முகாம், ரத்ததான முகாம் மற்றும் கண் பரிசோதனையும் நடைபெற்றது. இதில் ராகுல்காந்தியின் 54 வயதை குறிக்கும் வகையில் 54 காங்கிரஸ் தொண்டர்கள் ரத்ததானம் வழங்கினர்.

மேலும், மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கோடு சத்தியமூர்த்தி பவனுக்கு வந்த காங்கிரஸ் கட்சியினருக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

பின்னர் செல்வப்பெருந்தகை நிருபர்களிடம் பேசுகையில், "பாரதீய ஜனதாவுக்கும், பிரதமர் மோடிக்கும் மிகப்பெரிய சவால்களை விடுக்கும் ஒரே தலைவர், ஒரு முகம், ஒரு குரல் தலைவர் ராகுல் காந்திதான். அவர் எல்லா நலமும், வளமும் பெற்று தொடர்ந்து இந்திய தேசிய மக்களுக்காக பாடுபட வேண்டும் என்று தேசம் முழுவதும் காங்கிரஸ் தொண்டர்கள் பிரார்த்தித்து கொண்டு இருக்கிறார்கள். இந்திரா காந்தியின் குடும்பமே இந்த தேசத்தின் குடும்பம். இந்த தேசத்தின் பாதுகாவலர்கள்" என்று குறிப்பிட்டார்.

ராகுல்காந்தி பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகளில், தமிழ்நாடு காங்கிரஸ் பொதுச்செயலாளர்கள் காண்டீபன், தளபதி எஸ்.பாஸ்கர், பி.வி.தமிழ் செல்வன், மாநில செயலாளர்கள் ஜி.தமிழ்செல்வன், சுரேஷ் பாபு, இலக்கிய அணி தலைவர் பி.எஸ்.புத்தன், ஆர்.டி.ஐ. பிரிவு மாநில துணைத் தலைவர் மயிலை தரணி, எஸ். சி துறை தலைவர் ரஞ்சன் குமார், பொதுச்செயலாளர் மலையராஜா, கலைப்பிரிவு மாநில செயலாளர் சூளை ராஜேந்திரன், மாவட்டத் தலைவர் எம்.எஸ்.திரவியம், தமிழ்நாடு மகிளா காங்கிரஸ் தலைவி ஹசீனா சையத் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## ஜயேந்திர சரஸ்வதி ஆயுர்வேத கல்லூரி மருத்துவமனையில் 'பஞ்சகர்மா சிகிச்சை' அறைகளோடு 60 படுக்கை வார்டு: விஜயேந்திரர் துவக்கி வைத்தார்



சென்னை, ஜூன் 20, 2024: நாசரத்பேட்டை ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஆயுர்வேத கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ஸ்ரீ காஞ்சி காமோகோடி பீடத்தின் 70வது பீடாதிபதி, பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் புதுப்பிக்கப்பட்ட 60 படுக்கைகள் கொண்ட பஞ்சகர்மா சிகிச்சை அறைகளோடு கூடிய பொது வார்டு கட்டிடத்தை திறந்து வைத்தார்.

அப்போது அவர் உரையாற்றுகையில், "பழங்காலத்திலிருந்தே பாரதம், அறிவு மற்றும் ஞானத்தின் ராஜ்ஜியம். ஆரோக்கியமான வாழ்க்கைக்காக நாட்டிய சாஸ்திரம், சங்கீதம், யோகா மற்றும் ஆயுர்வேத சாஸ்திரம் போன்ற பல்வேறு அறிவியல் மற்றும் அறிவு அமைப்புகளை உலகிற்கு வழங்கியுள்ளது" என்றார்.

சுவாமிகள் ஆயுர்வேதத்தைப் பிரச்சாரம் செய்து, ஆயுர்வேதத்தை உலகளாவிய ரீதியில் பரப்புவதற்காகவும், சென்னையில் உள்ள நோயாளிகளின் சிகிச்சைக்காகவும், காஞ்சிபுரம் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மஹாவித்யாலயா நிகர் நிலை பல்கலைக்கழகத்தின் கீழ் ஆயுர்வேதக் கல்லூரியை நாசரத்பேட்டை கிராமத்தில் 1995ஆம் ஆண்டு தொடங்கியதை நினைவு கூர்ந்தார்.

மேலும் சுவாமிகள் தனது அனுகிரஹபாஷனத்தின் போது, ஆயுர்வேதம் மற்றும் பிற இந்திய அறிவு முறைகளை சமஸ்கிருதத்தின் அசல் எழுத்துக்கள் மூலம் மட்டுமே புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் சமஸ்கிருதம் மற்ற மொழிகளைப் போலல்லாமல் இந்த விஷயத்தைப் பற்றிய பரந்த புரிதலை அளிக்கிறது என்றார்.

ஸ்ரீ ஆதிசங்கரர் தனது சூத்திரத்தில் நோயால் பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் துயரங்களிலிருந்து வெளியேற்றுவதன் அவசியத்தை விரிவாகக் கூறியுள்ளதையும் நினைவு கூர்ந்தார். பிராணிகள் உட்பட அனைத்து உயிரினங்களின் நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பதில் ஆயுர்வேதத்தின் பயன் குறித்து எடுத்துரைத்தார். இக்கல்லூரியின் மாணவர்கள் எதிர்காலத்தில் ஆயுர்வேதத்தின் தூதுவர்களாக இருக்குமாறும் சுவாமிகள் அறிவுறுத்தினார்.

முன்னதாக, பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் கல்லூரி நிர்வாகிகள் பூர்ண கும்ப மரியாதையுடன் சுவாமிகளை வரவேற்றனர். அதன் பின்பு, புதுப்பிக்கப்பட்ட பொது வார்டு கட்டிடத்தை மங்களகரமான சடங்குகள் மூலம் திறந்து வைத்த சுவாமிகள் மருத்துவமனையின் பிற வசதிகளையும் பார்வையிட்டார். ஆயுர்வேத மருத்துவம் அனைத்து தரப்பு பொதுமக்களையும் சென்றடையுமாறும், நோயற்ற சமுதாயத்தை உருவாக்கவும் வேண்டிய முயற்சிகளை எடுக்குமாறு மருத்துவமனை அதிகாரிகளை அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சி நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் வேந்தர் வேம்பட்டி குடும்ப சாஸ்த்ரி, துணைவேந்தர் ஜி. ஸ்ரீநிவாசு, சுகாதார அறிவியல் டீன் எஸ். சுவாமிநாதன், அறிவியல் துறை டீன் கே. வெங்கடரமணன், ஆயுர்வேத கல்லூரி முதல்வர் சித்த ரஞ்சன் தாஸ், துணை முதல்வர் மற்றும் மருத்துவ கண்காணிப்பாளர் பிரவீன், நிர்வாக துணை முதல்வர் ஜி.ஆர்.ஆர்.சக்ரவர்த்தி, நிர்வாக அலுவலர் எஸ். சங்கரநாராயணன், பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் ஆயுர்வேத மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நெடுஞ்சாலைத்துறையில் புதிதாக பணியில் சேர்ந்துள்ள பொறியாளர்களுக்கு பயிற்சி வகுப்பு: அமைச்சர் வேலு துவக்கினார்



சென்னை, ஜூன் 20, 2024: நெடுஞ்சாலைத்துறையில் புதியதாக பணியில் சேர்ந்துள்ள உதவிப் பொறியாளர்களுக்கும் மற்றும் பதவி உயர்வு பெற்ற இளநிலைப் பொறியாளர்களுக்கும், அடித்தளப் பயிற்சி வகுப்பை, சென்னை கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

புதிதாக பணியில் சேர்ந்த பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலைத்துறை உள்சூழலை நன்கு தெரிந்திருக்க இப்பயிற்சி வழங்கப்படுகிறது. இது நடைமுறைகள், நடத்தை விதிகள், கொள்கைகள் ஆகியவற்றை புரிந்துகொள்ள உதவுகிறது. ஏராளமான வழிகாட்டிக் குறிப்புகளும், கையேடுகளும் சாலைப் பணிகள் நிர்வாகம் குறித்து இந்திய சாலைகள் குழுமத்தால் அவ்வப்போது வெளியிடப்படுகிறது.

சாலைப் பணிகள் செயலாக்கத்திற்கும் வழிகாட்டிக் குறியீடுகளுக்கும் இடைவெளி இருக்கத்தான் செய்கிறது. அந்த இடைவெளியினை நிரப்புவதற்கு ஒவ்வொரு சிறப்புப் பிரிவிலும் பயிற்சிகள் மிகவும் அவசியம்.

பயிற்சி என்பது ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கான பணியாளரின் திறன்களை அதிகரிக்கும் செயல் ஆகும். பெரிய நிறுவனங்களில் ஆண்டுதோறும் மொத்தப் பணி நேரத்தில் ஏறக்குறைய 5 விழுக்காடு பணிநேரம் பயிற்சிக்காக ஒதுக்கப்படுகிறது. நெடுஞ்சாலைத் துறையில் பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட நவீன வசதிகளுடன் நெடுஞ்சாலைத்துறைப் பயிற்சி மையம் அமைந்துள்ளது, அந்த வசதிகளை பயன்படுத்தி நெடுஞ்சாலைதுறை பொறியாளர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இப்பயிற்சி திட்டமானது, மொத்தம் 27 தலைப்புகளில் வகுக்கப்பட்டு, இத்துடன் பொறியாளர்களுக்கம், ஊழியர்களுக்கும் நடத்தப்பட்டு வருகிறது. 2023 -24 ம் ஆண்டில், 1,150 பொறியாளர்களுக்கும், 646 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கும், பல்வேறு தலைப்புகளில் பயிற்சித்திட்டத்தின்படி, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், 15 துணை ஆட்சியர்களுக்கும், தலைமை செயலகத்தின் 110 பிரிவில் உள்ள 24 அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

2024- 2025 ம் ஆண்டில், இதுவரை 108 பொறியாளர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து பயிற்சிகளின் போதும், காலை வேளையில் யோகா மற்றும் தியான வகுப்புகள், சிறந்த யோகா ஆசிரியர்களால் மனதும்-உடலும் சிறக்க வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த பயிற்சி வகுப்புகளை துறையில் புதிதாக இணைந்துள்ள பொறியாளர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இப்பயிற்சி வகுப்புத் தொடக்க விழாவில், நெடுஞ்சாலைகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் தலைமையுரையாற்றினார். தமிழ்நாடு சாலை மேம்பாட்டின் திட்ட இயக்குநர் இரா. செல்வராஜ், ஆராய்ச்சி நிலைய இயக்குநர் க.சேகர், முதன்மை இயக்குநர் இரா.சந்திரசேகர், தலைமைப் பொறியாளர் மா.முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

உள்ளது உள்ளபடி

## கோகோ-கோலா இந்தியா 100% மறுசுழற்சி செய்யப்பட்ட பெட் (ஆர்பெட்) பாட்டில்களுடன் மலிவு விலையில் சிறிய ஸ்பார்க்ளின் தொகுப்பை (ஏ எஸ் எஸ் பி) அறிமுகப்படுத்துகிறது




சென்னை, ஜூன் 20, 2024: கோகோ-கோலா இந்தியா நிறுவனம், 100% மறுசுழற்சி செய்யப்பட்ட பெட் (ஆர்பெட்) ஐ இந்தியாவில் பானத் தொழிலில் அறிமுகப்படுத்திய பிறகு, ஒரு வட்டப் பொருளாதாரத்தை உருவாக்குவதில் மற்றொரு அர்த்தமுள்ள படியை மேற்கொண்டுள்ளது. ஒரிசா மாநிலத்தில் தொடங்கி 250 மில்லி பாட்டில்களில் 100% மறுசுழற்சி செய்யப்பட்ட பெட் (ஆர்பெட்) உடன் ஏ எஸ் எஸ் பி இல் கோகோ-கோலா ஐ அறிமுகப்படுத்துவதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

கோகோ-கோலா இன் பாட்டில் பங்குதாரர், இந்துஸ்தான் கோகோ-கோலா பெவரேஜஸ் பிரைவேட் லமிடெட் (எச் சி சி பி பி எல்) மூலம் தயாரிக்கப்படும் இந்த முன்முயற்சியானது, கார்பன் தடயத்தைக் குறைப்பதிலும், சுற்றுச்சூழல் பொறுப்பை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதன் மூலம், நிலைத்தன்மைக்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வழக்கமான விர்ஜின் பெட் பேக்கேஜிங்குடன் ஒப்பிடும்போது, ஏ எஸ் எஸ் பி (மலிவு விலை சிறிய ஸ்பார்க்லிங் பேக்கேஜ்) இல், பெட் மெட்டீரியலின் லைட் வெயிட்டிங் மூலம் உமிழ்வுகள் 36% குறைக்கப்படுகின்றன. கூடுதலாக, கன்னி பெட் இலிருந்து மறுசுழற்சி செய்யப்பட்ட பெட்க்கு ஏ எஸ் எஸ் பி இல் மாறுவது கார்பன் தடம் மேலும் குறைவதற்கு பங்களிக்கிறது, இதன் விளைவாக விர்ஜின் பெட் உடன் ஏ எஸ் எஸ் பி அல்லாத பேக்கேஜிங் ஒப்பிடும்போது ஒட்டுமொத்தமாக 66% குறைவு சாத்தியமாகிறது.

100% ஆர்பெட் ஏ எஸ் எஸ் பி ஐ அறிமுகப்படுத்தி, இந்துஸ்தான் கோகோ கோலா பானங்கள் (எச் சி சி பி) சப்ளை செயின் நிர்வாக இயக்குனர் திரு. அலோக் ஷர்மா அவர்கள், “ஏ எஸ் எஸ் பி இல் மறுசுழற்சி செய்யப்பட்ட பெட் இன் அறிமுகம் பிளாஸ்டிக் சுழற்சியை குறைப்பதற்கான ஒரு முக்கியமான படியாகும், இது ஒட்டுமொத்த கார்பன் தடயத்தில் கணிசமான குறைப்பை வலியுறுத்துகிறது. இந்த முன்முயற்சியானது நிலையான நடைமுறைகளை அளவிடுவதற்கும், இந்தியாவில் பானத் தொழிலுக்கு பசுமையான எதிர்காலத்தை வடிவமைப்பதில் வழிவகுக்கும் எங்கள் பரந்த பார்வையுடன் ஒத்துப்போகிறது" என்று கூறினார்.

கோகோ கோலா இந்தியா மற்றும் தென்மேற்கு ஆசியாவின் டெக்னிக்கல் இன்னோவேஷன் மற்றும் சப்ளை செயின் துணைத் தலைவர் திரு.என்ரிக் அக்கர்மேன் அவர்கள், “இந்தியாவில் ஆர்பெட் ஐ விரிவுபடுத்துவதற்கான எங்கள் முயற்சிகள், இந்தியாவில் உள்ள நுகர்வோருக்கு உயர்தர, உணவு தர, மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கிடைப்பதை அதிகரிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டின் சான்றாகும். சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்த பாட்டில்கள் மூலம், பேக்கேஜிங்கிற்கான ஒரு வட்டப் பொருளாதாரத்தை இயக்கவும், கழிவுகள் மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைக்கவும், 2030-க்குள் 50% மறுசுழற்சி செய்யப்பட்ட உள்ளடக்கத்துடன் பாட்டில்களை உருவாக்கும் உலகக் குறிக்கோளுடன் நம்மை நெருக்கமாகக் கொண்டு வருகிறோம்” என்று கூறினார்.

கோகோ-கோலா நிறுவனம் 40க்கும் மேற்பட்ட சந்தைகளில் 100% ஆர்பெட் பாட்டில்களை வழங்குகிறது. ஒரு லட்சிய நிலையான பேக்கேஜிங் திட்டமான வேர்ல்ட் வித்தவுட் வேஸ்ட் தொடங்கப்பட்டதன் மூலம், 2030 ஆம் ஆண்டுக்குள் விற்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பாட்டில் அல்லது கேன் ஐ சேகரித்து மறுசுழற்சி செய்ய உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. 2025 ஆம் ஆண்டளவில் அதன் 100% பேக்கேஜிங் உலகளவில் மறுசுழற்சி செய்யக்கூடியதாக மாற்றுவது மற்றும் 2030 ஆம் ஆண்டுக்குள் அதன் பேக்கேஜிங்கில் குறைந்தபட்சம் 50% மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவது இலக்கு ஆகும்.

## நோபல் பரிசு பெற்ற நர்கிஸ் முகமதிக்கு மேலும் ஓராண்டோடு 17 ஆண்டுகள் சிறை



சென்னை, ஜூன் 20, 2024: நோபல் பரிசு பெற்ற நர்கிஸ் முகமதிக்கு மேலும் ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் மொத்தம் 17 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் கடந்த 1979-ம் ஆண்டு நடந்த இஸ்லாமிய புரட்சிக்குப் பின் அந்நாட்டில் இஸ்லாமிய சட்டங்கள் அமல்படுத்தத்தப்பட்டு பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டது . இதை எதிர்த்து அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது எதிர்ப்புக்குரல் எழுந்து வந்தது. அப்படி அரசின் அடிப்படைவாதத்தை எதிரித்து குரல் கொடுத்து வந்தவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் பெண்கள் ஹிஜாப் அணிய நிர்பந்திக்கப்படுவதற்கு எதிராகவும் அந்நாட்டின் மரண தண்டனைக்கு எதிராகவும் போராடிவந்த பெண் பத்திரிகையாளரும், சமூக செயல்பாட்டாளருமான நர்கிஸ் முகமதி கடந்த 2021-ம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் உள்ள அவருக்கு கடந்த 2023-ம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது உலக அளவில் பேசுபொருளானது. பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளை எதிர்த்து போராடி வருவதால் சிறையில் உள்ள அவருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஈரான் அரசு இதற்கு கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில்தான் நர்கிஸ் முகமதி, அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டும் வகையில் பிரச்சாரம் செய்த குற்றத்திற்காக மேலும் ஒரு ஆண்டு சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது . மேலும் அந்நாட்டின் பாராளுமன்ற தேர்தலை புறக்கணிக்க மக்களை தூண்டியதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் 6 முறை அவர் மீதான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டு இதுவரை மொத்தமாக 16 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நடந்த விசாரணையில் அவருக்கு 15 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் தற்போது மேலும் ஒரு ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## 10-வது பதிப்பாக நடைபெறும் ‘இனோவேஷன் ஃபார் இந்தியா’ விருதுகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்கும் மாரிகோ இனோவேஷன் ஃபவுண்டேஷன்

சென்னை, ஜூன் 20, 2024: சிறப்பான தாக்கத்தை உருவாக்கும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதில் முன்னோடியாக திகழும் மாரிகோ இனோவேஷன் ஃபவுண்டேஷன் (எம் ஐ எஃப்), இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் அதன் இனோவேஷன் ஃபார் இந்தியா விருதுகள்” என்பதன் 10-வது பதிப்பிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதை இன்று அறிவித்திருக்கிறது. பெரிய அளவில் நேர்மறையான சமூக, சுற்றுச்சூழல் ரீதியிலான மற்றும் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியத்திறன் கொண்ட புத்தாக்க நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அங்கீகரிப்பது மற்றும் ஆதரவளிப்பது என்ற குறிக்கோளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் இந்த தளமானது இந்தியாவில் இத்தகைய செயல்பாடுகளை முதலில் தொடங்கிய பெருமைக்குரியது. 2006-ம் ஆண்டில் நிறுவப்பட்ட இத்தளம், தொடர்ந்து சிறப்பாக செயலாற்றி வருகிறது. ஒரு மைல்கல் சாதனையாக 10-வது பதிப்பை இந்தாண்டு கொண்டாடும் இந்த அறக்கட்டளை, புத்தாக்கத்தை பேணி வளர்க்கும் தனது செழுமையான பாரம்பரியத்தை பேணிகாப்பது மீது உறுதிபூண்டிருக்கிறது; இந்நாட்டில் நேர்மறையான அதிரடி மாற்றத்தை உருவாக்குவதற்கான வினையூக்கியாக செயல்படும் தனது பணியை இன்னும் தீவிரமாக தொடர்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது. இவ்விருதுகளின் 10வது பதிப்பு, இரு வகையினங்களில் சிறப்பான புத்தாக்க கண்டுபிடிப்புகள் மீது சிறப்பு கவனம் செலுத்தும். பிசினஸ் வகையினத்தில் இந்தியாவில் அடித்தளத்தைக் கொண்டுள்ள ஸ்டார்ட்-அப்கள் உட்பட இலாப நோக்குடன் செயல்படும் நிறுவனங்கள் உள்ளடங்கும். சமூக வகையினத்தில், அரசு நிறுவனங்கள், அறக்கொடை அமைப்புகள், டிரஸ்டுகள், பல்வேறு முகமைகள், சமூக நலன் பேணும் அறக்கட்டளைகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், மற்றும் கார்ப்பரேட் சமூக பொறுப்புறுதி பிரிவுகள் / பெருநிறுவன நிதியங்கள் போன்ற இலாப நோக்கின்றி இயங்கும் அமைப்புகள் இடம்பெறுகின்றன.

இவ்விருதுகளுக்காக விண்ணப்பிக்கும் செயல்முறைக்கான சாளரம் 2024 ஜுன் 17ஆம் தேதி தொடங்கி, 2024 ஜுலை 17 வரை திறந்திருக்கும். இந்த அதிகாரப்பூர்வ வலைதளத்தின் வழியாக [https://form.jotform.com/MIFAwards/mif_innovation-for-india-awards_app], தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு ஆர்வமுள்ள புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர் . இனோவேஷன் ஃபார் இந்தியா விருதுகளைப் பெறும் நிறுவனங்கள் மற்றும் நபர்களின் விண்ணப்பங்களை பரிசீலித்து தேர்வுசெய்யும் செயல்முறை 2024 ஆகஸ்ட் முதல் 2025 மார்ச் வரை எட்டு மாதங்களுக்கு மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வகையினத்திற்கும் ஒரு சுதந்திரமான நடுவர்கள் குழுவால் மேற்கொள்ளப்படும் இரண்டு சுற்றுகள் மதிப்பாய்வும் மற்றும் ஒரு சுயாதீனமான அறிவுத்திறன் அமைப்பால் களத்தில் மேற்கொள்ளப்படும் விரிவான ஆய்வும் உள்ளடங்கும். மேற்குறிப்பிடப்பட்ட இரு வகையினங்களுக்குமான நடுவர்கள் குழுவில் இந்தியாவின் மிகப்பிரபலமான பிசினஸ் மற்றும் சமூக தலைவர்கள் சிலர் இடம்பெறுகின்றனர். பெயின் கேபிட்டல் இந்தியாவின் தலைவரும், ஏ டி ஈ சந்திரா ஃபவுண்டேஷனின் நிறுவனருமான அமித் சந்திரா (நடுவர் குழுவின் தலைவர்), லேடீஸ் ஹு லீட் -ன் நிறுவனரும், முன்னாள் பத்திரிகையாளருமான ஆபா பாகயா, நாஸ்காம் அமைப்பின் தலைவரான தெப்ஜானி கோஷ், செல்கோ ஃபவுண்டேஷனின் இயக்குநர் ஹுடா ஜாஃபர், எஜுகேட் கேர்ல்ஸ் அமைப்பின் நிறுவனர் சஃபீனா ஹுசைன் ஆகியோர் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்விருதுகளுக்கான விண்ணப்பங்கள், புத்தாக்கம், ஏற்படுத்தும் தாக்கம், தரம் மற்றும் அளவை உயர்த்தும் திறன், நீண்டகால அளவிற்கு வலுவுடன் செயல்படும் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

மாரிகோ இனோவேஷன் ஃபவுண்டேஷனின் நிறுவனரான திரு. ஹர்ஷ் மாரிவாலா பேசுகையில், “இனோவேஷன் ஃபார் இந்தியா விருதுகளின் 10வது நிகழ்வு தொடக்கத்தின்போது நம் நாட்டின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலைமாற்றத் திறன்கொண்ட புத்தாக்கங்களை உலகறிய காட்சிப்படுத்தும் பாரம்பரியத்தை நாங்கள் பெருமிதத்துடன் நினைவுகூருகிறோம்; அதே நேரத்தில் தேசம் முழுவதிலும் நேர்மறையான மாற்றத்தை முன்னெடுக்கவும், அவர்களது செயல்பாடுகளை விரிவாக்கவும் மூலதன ஆதரவைக் கடந்த உதவியை வழங்கவும் மற்றும் மாறுபட்ட பல்வேறு புத்தாக்கங்களை கண்டறியவும் நாங்கள் மேற்கொண்டிருக்கும் பொறுப்புறுதியை நாங்கள் புதுப்பிக்கிறோம்,” என்று கூறினார். இந்த 10வது பதிப்பின் மாபெரும் இறுதி நிகழ்வு 2025 மார்ச் 6 ஆம் தேதியன்று மும்பையில் நடைபெறவிருக்கிறது. இப்பதிப்பின் வெற்றியாளர்களுக்கு எம் ஐ எஃப்-ன் புத்தாக்கதினத்திற்கான அணுகுவசதி, பிசினஸ் வாய்ப்புகளை வழங்கும் திறன்கொண்ட முதலீட்டாளர்கள், கார்ப்பரேட் தலைவர்கள் மற்றும் மானியம் வழங்கும் நிறுவனங்களோடு வலையமைப்பை உருவாக்குவதற்கான அணுகுவசதி உட்பட மூலதனம் என்பதைக் கடந்த பல்வேறு ஆதரவுகளின் தொகுப்பை பெற்று பயனடையும் வாய்ப்பு கிடைக்கும். கூடுதலாக, விருதைப் பெறும் ஒவ்வொரு வெற்றியாளரும் அவரது செயல்பாட்டை விளம்பரப்படுத்திக் கொள்வதற்கான நல்ல வாய்ப்பைப் பெறுவார். அத்துடன், இந்தியாவெங்கிலும் 30 மில்லியன் பயனாளிகள் என்ற ஒருங்கிணைந்த அடித்தளத்தைக் கொண்டிருக்கும் தொழில்முனைவுத் திறன் மற்றும் உத்வேகமளிக்கும் உரைகளுக்கான “ஜோஷ் டாக்ஸ்” பாட்காஸ்ட்-ல் இடம்பெறும் சிறந்த வாய்ப்பும் அவர்களுக்கு கிடைக்கும். மேலும், தங்களது கதையை திறம்பட எடுத்துச் சொல்லும் கலை மற்றும் செயலாக்க இருப்புக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி அமர்வுகளும் ஒவ்வொரு வெற்றியாளருக்கும் வழங்கப்படும். தலைமைத்துவ பண்பில் பயிற்சிக்கான 6 பிரத்யேக நேரடி அமர்வுகளில் பங்கேற்கும் வாய்ப்பும் வழங்கப்படும். அத்துடன், மாற்றங்களின் கதைகளுக்கான உலகின் மிகப்பெரிய சிறப்பான தளமாக புகழ்பெற்றிருக்கும் “தி பெட்டர் இந்தியா” அமைப்பின் கூட்டாண்மையோடு உருவாக்கப்படும் ஒரு பிரத்யேக காணொளியிலும் ஒவ்வொரு வெற்றியாளரும் இடம்பெறுவார்.

மாரிகோ இனோவேஷனின் நிர்வாகக்குழு தலைவரும், நடுவர் குழுவின் தலைவருமான திரு. அமித் சந்திரா இது குறித்து கூறியதாவது: “அடிப்படை நிலைமாற்றத்தை ஏற்படுத்துவதில் இந்திய புத்தாக்கங்கள் மீது வெளிச்சத்தை பாய்ச்சி அவைகளை உலகறியச் செய்வதே இனோவேஷன் ஃபார் இந்தியா விருதுகளின் நோக்கமாகும். இது குறித்த விழிப்புணர்வை பரப்புவது மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதன் மூலம் இவைகளது பயணத்தில் ஒரு வினையூக்கியாக எம் ஐ எஃப் செயல்படுகிறது.”

2022-ஆம் ஆண்டில், 9 வது பதிப்பாக நடைபெற்ற இனோவேஷன் ஃபார் இந்தியா விருதுகளுக்காக 750-க்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. அவைகளில் ஆறு மிகச்சிறப்பான புத்தாக்கங்கள் அடையாளம் காணப்பட்டு விருதுகளின் மூலம் கௌரவிக்கப்பட்டன. புகழ்பெற்ற வான்வெளி தொழில்நுட்ப நிறுவனமான துருவா ஸ்பேஸ், இந்தியாவின் கோவிட்-19 தடுப்பூசி திட்டத்தின் டிஜிட்டல் முதுகெலும்பாக செயல்பட்ட கோவின், செயற்கை நுண்ணறிவின் மூலம் கழிவுகளை பிரித்து வகைப்படுத்தும் தீர்வான இஷித்வா ரோபோட்டிக் சிஸ்டம்ஸ், இ-ஐ சி யூகளுக்கான நேரடி தொடர்பற்ற தொலைதூர கண்காணிப்பு சாதனமான டோசீ மற்றும் சமூக சுகாதார கண்காணிப்புக்கான ஒரு இஹெல்த் தளமான குஷி பேபி ஆகியவை இந்நிகழ்வின் வெற்றியாளர்களாகும். இதுவரை நடைபெற்ற ஒன்பது பதிப்புகள் வழியாக சிறப்பான மாற்றத்தை உருவாக்கிய 65-க்கும் அதிகமான புத்தாக்கங்களை இவ்விருதுகள் கௌரவித்து பெருமைப்படுத்தியிருக்கின்றன. மாரிகோ இனோவேஷன் ஃபவுண்டேஷனின் தலைவரான சுரஞ்சனா கோஷ் பேசுகையில், “இனி வரவிருக்கும் புத்தாக்குனர்களது தலைமுறைக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளிக்கிற, அதிக தாக்கம் ஏற்படுத்தும் புத்தாக்கங்கள் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சி பலரும் அறியுமாறு செய்வதில் தி இனோவேஷன் ஃபார் இந்தியா விருதுகள் செயல்திட்டம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது. தேசம் முழுவதிலும் நேர்மறை மாற்றத்தின் தொடர் விளைவுகளை உருவாக்குபவர்களாக இந்த புத்தாக்குனர்கள் இருப்பார்கள். நம் நாட்டில் புத்தாக்க கலாச்சாரத்தை பேணி வளர்க்க வேண்டும் என்ற எம் ஐ எஃப்-ன் தொலைநோக்கு திட்டத்தையொட்டியதாக இவ்விருதுகள் நிகழ்வு நடத்தப்படுகிறது,” என்று குறிப்பிட்டார்.

லிங்க்டுஇன் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் #InnovationForIndiaAwards-ஐ பின்பற்றுவதன் மூலம் இது குறித்த சமீபத்திய தகவல்களைப் பெறுங்கள்.

# அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனைகள் நீரிழிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூட்டு பாதிப்பிலிருந்து பாதுகாப்பை அளிக்கும் அதிநவீன சிகிச்சை மையத்தைத் தொடங்குகிறது!

*சென்னை, ஜூன் 20, 2024:* சென்னை கீழ்ப்பாக்கம், பிஎச் சாலையில் உள்ள அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனை, நீரிழிவினால் பாதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளின் பாதங்களைப் பராமரிக்கும் சிகிச்சை முறைகளில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், மேம்பட்ட நீரிழிவு மூட்டு பாதுகாப்பு மையத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது. இந்த நிபுணத்துவமிக்க சிறப்பு மையத்தின் ஆரம்பமானது, இந்தியாவில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் பாதங்களுக்கு ஏற்படும் பாதிப்பு நிலைமைகளுக்கான சிறப்புச்சிகிச்சை மற்றும் பாரமரிப்பு மேலாண்மையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருப்பதை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

இந்தியாவில் மட்டும் 101 மில்லியன் மக்கள் நீரழிவு நோயுடன் வாழ்கிறார்கள் என மதிப்பிடப்பட்டிருக்கும் நிலையில், உலகில் நீரிழிவு நோயின் தலைமை இடம் என்ற சுமையைத் தாங்கி நிற்கிறது இந்தியா. இந்த நாள்பட்ட நிலையால் ஏற்படும் எண்ணற்ற சவால்களில், கால் தொடர்பான பிரச்சனைகள் சுமார் 25% நீரிழிவு நோயாளிகளை பாதிக்கின்றன. அதாவது இந்த பாதிப்பினால் ஏறக்குறைய 25 மில்லியன் மக்களின் வாழ்க்கை பெரும் அபாயத்தில் இருக்கிறது. நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் கால்கள் உண்டாகும் இந்த சிக்கல்கள் பெரும்பாலும் எளிதில் ஆறாத புண்கள் மற்றும் மீண்டும் மீண்டும் வரும் நோய்த்தொற்றுகளாக வெளிப்படுகின்றன. மேலும் இவை இது உடல் ரீதியாக மட்டுமல்லாமல், அவர்களது உயிருக்கும் ஆபத்தான பல சிக்கல்களையும் உருவாக்குகிறது. முன்பெல்லாம், பல நீரழிவு நோயாளிகள் தங்களது மூட்டு பகுதியை இழக்க வேண்டிய சூழலை எதிர்கொண்டனர். உலகளாவிய புள்ளிவிவரங்களானது, உலகில் ஏதாவது ஒரு பகுதியில் ஒவ்வொரு 30 விநாடிகளுக்கும் ஒரு நீரழிவு நோயாளி தனது கீழ் மூட்டு பகுதியை இழப்பதாக தெரிவிக்கின்றன.

இருப்பினும், நீரிழிவு மூட்டு பாதுகாப்புக்கான சிறப்பு சிகிச்சையில் கவனம் செலுத்தும் இம்மையத்தின் ஆரம்பமானது, தற்போது உள்ள நீரழிவு நோயினால் கால்களுக்கு உண்டாகும் பாதிப்புகளின் சூழலை மாற்றியமைப்பதாக அமைந்திருக்கிறது. இம்மையத்தின் தாரக மந்திரம் "உயிர்களை காப்பாற்ற மூட்டுகளைக் காப்பாற்றுவோம்" என மிகத்தெளிவாக உள்ளது. ட்அதிக ஆபத்து உள்ள கால் பிரச்சனைகளை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் நல்ல தீர்வுகளை அளிக்கும் சரியான சிகிச்சை உத்திகள், நோயாளிகளுக்கு கடுமையான அறுவை சிகிச்சைகளின் தேவையை வெகுவாக குறைக்க உதவுகின்றன. மிகவும் கடுமையான நோய்த்தொற்றுகளுக்கு, பல்வேறு சிறப்பு சிகிச்சைகளுடன் கூடிய அணுகுமுறை என்பது மிக மிக அவசியமானது. இது கிளைசெமிக் கட்டுப்பாட்டை மட்டுமல்ல, நோய்த்தொற்றின் பரவலைத் தடுக்கவும் உதவுகிறது. அத்துடன் பாதிக்கப்பட்ட மூட்டுகளைக் காப்பாற்ற தேவையான மருத்துவ நடைமுறைகளை மிகத்துல்லியமாக மேற்கொள்ளவும் வழிவகை செய்கிறது.

எண்டோவாஸ்குலர் மற்றும் மைக்ரோ சர்ஜிக்கல் நுட்பங்களில் ஏற்பட்டிருக்கும் சமீபத்திய முன்னேற்றங்கள், மருத்துவர்கள் நம் உடலில் உள்ள மற்ற பாகங்களிலிருந்து தோல் மற்றும் மென்மையான திசுக்களைப் பயன்படுத்தி நீண்டகாலமாக ஆறாமல் இருக்கும் காயங்களை துல்லியமாக குணப்படுத்த உதவுகின்றன. இந்த புதுமையான அணுகுமுறையானது, துல்லியமான நீரிழிவு நோய் சிகிச்சை மேலாண்மை, அதிக அக்கறையுடனான காயப் பராமரிப்பு மற்றும் மிகவும் நுட்பமான நுண் அறுவை சிகிச்சை முறைகளின் சரியான பயன்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது. இந்த அணுகுமுறையானது, உலகெங்கிலும் உள்ள சிறப்பு சிகிச்சை மையங்களில் 80% வரை பாதிப்பு விகிதத்தை குறைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர். வி. புருஷோத்தமன், மூத்த ஆலோசகர் பிளாஸ்டிக் மற்றும் மைக்ரோவாஸ்குலர் அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் டாக்டர் சபரி கிரிஷ் அம்பாட், ஆலோசகர் பிளாஸ்டிக் மற்றும் மைக்ரோவாஸ்குலர் அறுவை சிகிச்சை நிபுணர் ஆகியோர் இருவரும் கூறுகையில், "எங்களது மேம்பட்ட நீரிழிவு மூட்டு பாதுகாப்பு சிகிச்சை மையத்தின் குறிக்கோள், பாதிப்பை முன்கூட்டியே கண்டறிந்து, அவற்றுக்கான நவீன சிகிச்சை முறைகளின் மூலம், எங்களிடம் சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் மூட்டு துண்டிக்கப்படுவதைத் தடுப்பதோடு, அவர்களது வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்கும் வகையில் ஒரு முழுமையான சிகிச்சையை வழங்குவது ஆகும்.'' என்றார்கள். மேம்பட்ட நீரிழிவு மூட்டு பாதுகாப்பு மையமானது, 19 ஜூன் 2024 அன்று கீழ்ப்பாக்கம் அப்போலோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனைகளில் தொடங்கப்படுகிறது. மேலும் இம்மையமனாது ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழன் கிழமையில் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை செயல்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு வழங்கப்படும் பரிசோதனைகளில் சிபிசி, யூரியா, கிரியேட்டினின், இரத்தத்தில் இருக்கும் சர்க்கரை அளவு (ரேண்டம்), எக்ஸ்-ரே மற்றும் பிதீகி1நீ ஆகியவற்றை பற்றி தெரிந்து கொள்ளமுடியும். இந்த பரிசோதனை கட்டணம் ரூ. 3500/-. மட்டுமே. மேலும், பிளாஸ்டிக் சர்ஜரி மற்றும் சர்க்கரை நோய் நிபுணர்களின் இலவச ஆலோசனைகள் மூலம் நோயாளிகள் பயனடையலாம்.

மூட்டு பாதிப்படையாமல் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், அதிநவீன நீரிழிவு மூட்டு பாதுகாப்பு மையம் சர்க்கரை நோயாளிகளின் கால்களைக் காப்பாற்றுவது மட்டுமில்லாமல், அவரகளது உயிர்களையும் வாழ்வாதாரங்களையும் காப்பாற்றுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நீரிழிவு நோயின் பாதிப்பினால் கீழ் மூட்டு அகற்றப்பட்டதற்கு பிந்தைய ஐந்தாண்டுகளில் இறப்பவர்களின் விகிதங்கள் 50-80% வரை அதிகமாக இருக்கலாம என தெரியவந்திருக்கின்றது. இந்த விகிதமானது பல பொதுவான புற்றுநோய்களை விட அதிகமாக இருக்கும் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. இந்த சிறப்புச் சிகிச்சை மற்றும் பராமரிப்பு துறை தொடர்ந்து வளர்ச்சிக்கண்டு வருவதால், இந்தியாவில் நீரிழிவு நோயினால் கால்களில் உண்டாகும் பாதிப்புக்களுக்கான பராமரிப்பு மீதான கண்ணோட்டம் முன்பை விட பிரகாசமாக உள்ளது.

# இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பாதுகாப்பான ஈ வி ஆன பண்ச்.ஈ வி பரத்-என் சி ஏ பிஇலிருந்து இதுவரை இல்லாத அதிகபட்ச புள்ளிகளுடன் 5-நட்சத்திர பாதுகாப்பு ரேட்டிங்கைப் பெற்றுள்ளது

*சென்னை, ஜூன் 20, 2024:* இந்தியாவின் ஈ வி புரட்சியின் முன்னோடியான டாடா மோட்டார்ஸின் துணை நிறுவனமான டாடா பாசஞ்சர் எலக்ட்ரிக் மொபிலிட்டி லிமிடெட் (டி பி ஈ எம்) இன்று ஒரு குறிப்பிடத்தக்க அறிவிப்பில் பண்ச்.ஈ வி மற்றும் நெக்ஸான்.ஈ வி ஆகியவை 5-நட்சத்திர பாரத்-என் சி ஏ பி பாதுகாப்பு ரேட்டிங்கைப் பெற்றுள்ளதை அறிவித்தது. பண்ச்.ஈ வி ஒரு பெரிய மைல்கல்லைப் பெற்று, இதுவரை எந்த வாகனமும் இதுவரை அடையாத அதிகபட்ச புள்ளிகளைப் பெற்றுள்ளது - 31.46/32 மற்றும் 45/49 புள்ளிகள் முறையே வயது வந்தோர் பாதுகாப்பிற்காக (ஏ ஓ பி) மற்றும் குழந்தைப் பாதுகாப்பு (சி ஓ பி), நெக்ஸான்.ஈ வி ஏ ஓ பி மற்றும் சி ஓ பிக்கு முறையே 29.86/32 மற்றும் 44.95/49 புள்ளிகளைப் பெற்றனர். இதன் மூலம், பாரத்-என் சி ஏ பி மற்றும் குளோபல்-என் சி ஏ பி சோதனைகளில் 5 நட்சத்திரங்களைப் பெற்ற பாதுகாப்பான எஸ் யூ வி போர்ட்ஃபோலியோவைக் கொண்ட ஒரே ஓ ஈ எம் நிறுவனமாக டாடா மோட்டார்ஸ் திகழ்கிறது.

மாண்புமிகு இந்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள், "நெக்ஸான்.ஈ வி மற்றும் பண்ச்.ஈ வி ஆகியவை பாரத்-என் சி ஏ பியின் கீழ் 5-நட்சத்திர மதிப்பீட்டைப் பெற்றுள்ளதால், இந்த குறிப்பிடத்தக்க மைல்கல்லில் டாடா மோட்டார்ஸுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சான்றிதழானது, நாட்டில் பாதுகாப்பான வாகனங்களுக்கான இந்திய அரசாங்கத்தின் பார்வையுடன் ஒத்துப்போகிறது மற்றும் இந்தியாவின் ஆட்டோமொபைல் துறையை 'ஆத்மநிர்பர்' ஆக்குவதில் பாரத்-என் சி ஏ பியின் பங்கை வலியுறுத்துகிறது. பாரத்-என் சி ஏ பிகார் பாதுகாப்புத் தரமானது, இந்தியாவை உலகளாவிய ஆட்டோமொபைல் மையமாக மாற்றுவதற்கும், சர்வதேச சந்தைகளில் அதன் ஏற்றுமதித் தகுதியை அதிகரிப்பதற்கும் அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில் முக்கியமானது" என்று கூறினார்.

இந்த அசாதாரண சாதனை குறித்து கருத்து தெரிவித்த டாடா பயணிகள் எலக்ட்ரிக் மொபிலிட்டி மற்றும் டாடா மோட்டார்ஸ் பயணிகள் வாகனங்களின் மேலாண்மை இயக்குனர் ஷைலேஷ் சந்திரா, "பாதுகாப்பு ஒரு காலத்தில் குறைவான முக்கியத்துவத்தையே பெற்றது, இப்போது இந்திய கார் வாங்குபவருக்கு அது முதன்மையான முன்னுரிமையாக மாறியுள்ளது. டாடா மோட்டார்ஸில், பாதுகாப்பு என்பது அதன் ட என் ஏ-ல் பொறிக்கப்பட்டுள்ளது, இது எங்களை ஒரு தொழில்துறை அளவுகோலாக மாற்றியுள்ளது. பாதுகாப்பு உரையாடலை இயக்குவதில் நாங்கள் தொடர்ந்து முன்னோடிகளாக இருந்து வருகிறோம் - விலைப் புள்ளியைப் பொருட்படுத்தாமல், நாங்கள் தயாரிக்கும் ஒவ்வொரு வாகனத்திலும் எங்கள் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கப்படுவதை உறுதிசெய்கிறது. கடுமையான அரசாங்க பாதுகாப்புத் தரங்களை நாங்கள் வரவேற்கிறோம் மற்றும் வாகனங்களை அனுப்பிய முதல் உற்பத்தியாளர் என்பதில் பெருமிதம் கொள்கிறோம் மற்றும் பாரத்-என் சி ஏ பி நெறிமுறையை மிகச்சிறந்த முடிவுகளுடன் வழிநடத்துகிறோம். இந்தியாவின் பாதுகாப்பான வாகனமான - ஈ வியான பண்ச்.ஈ வியைத் தயாரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், அதே நேரத்தில் நெக்ஸான்.ஈ வி அதன் 5-நட்சத்திர மதிப்பீட்டில் பாதுகாப்பின் பாரம்பரியத்தைத் தொடர்கிறது. பாரத்-என் சி ஏ பியின் கீழ் சோதனை செய்யப்பட்ட எங்கள் நான்கு எஸ் யூ விக்களும் ஒன்றாக 5-நட்சத்திர மதிப்பீடுகளைப் பெற்றுள்ளன, இது அனைத்து பயணிகள் வாகனங்களுக்கும் ஒரு அளவுகோலை அமைக்கிறது. முன்னோக்கிப் பார்க்கும்போது, □□ஒவ்வொரு சாலைப் பயனருக்கும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வழிவகுக்க எங்களுக்கு உதவுவதற்கும், விரிவான ஆர்&டி ஆதரவுடன், பாதுகாப்பு குறித்த எங்களின் செயலூக்கமான நிலைப்பாடு தொடரும்" என்று கூறியுள்ளார்.

பண்ச்.ஈ வி, அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, ஈ வி ஆர்வலர்கள் மற்றும் முதல் முறையாக வாங்குபவர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக உள்ளது, கிராமப்புற சந்தைகளில் இருந்து 35% உரிமையாளர்கள் உள்ளனர். அதன் நீண்ட தூரம், உயர்ந்த செயல்திறன், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் பொதுவாக 2 முதல் 3 பிரிவுகளில் காணப்படும் அம்சங்கள் ஆகியவற்றின் கலவையுடன், பண்ச்.ஈ வி அதன் குடும்பத்தில் 10,000 பெருமைமிக்க உறுப்பினர்களை ஈர்த்துள்ளது. இது ஒரு உண்மையான மின்சார எஸ் யூ வி மட்டுமல்ல; இது இயக்கத்தின் எதிர்காலத்தில் ஒரு தைரியமான படியாகும். பண்ச்.ஈ வி ஆனது வசதிக்காகவும், அதன் எடைக்கு மேல் அழுத்தத்தை வழங்கவும், வாடிக்கையாளர்களுக்கு அணுகக்கூடிய பிரீமியம் அனுபவத்தை வழங்குகிறது.

இந்தியாவின் ஈ வி புரட்சியின் கிக்ஸ்டார்ட்டராகக் கருதப்படும் நெக்ஸான்.ஈ வி ஆனது 2020 இல் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து 68,000 யூனிட்டுகளுக்கு மேல் விற்பனை செய்துள்ளது. 2023 இல் வெளியிடப்பட்ட எஸ் யூ வியின் மேம்படுத்தப்பட்ட புரட்சிகரமான அவதாரத்தில், ஒட்டுமொத்த இந்திய வாகனத் துறையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது. அதன் குறிப்பிடத்தக்க டிஜிட்டல் வடிவமைப்பு, தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் ஓட்டுநர் அனுபவம் மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகள் ஆகியவை சக்கரங்களில் உண்மையான கேஜெட்டாக ஆக்கியது மற்றும் இந்திய ஈ வி துறையில் ஒரு புதிய அளவுகோலை நிறுவியுள்ளது.

# டாடா மோட்டார்ஸ் தனது வணிக வாகனங்களின் விலையை ஜூலை 2024 முதல் உயர்த்துவதாக அறிவித்துள்ளது

*சென்னை, ஜூன் 20, 2024:* டாடா மோட்டார்ஸ் தனது வணிக வாகனங்களின் விலையை ஜூலை 1, 2024 முதல் 2% வரை உயர்த்துவதாக அறிவித்துள்ளது. பொருட்களின் விலை உயர்வின் தாக்கத்தை ஈடுகட்டவே இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்படுகிறது. இது வணிக வாகனங்களின் முழு வரம்பிலும் பொருந்தும் மற்றும் தனிப்பட்ட மாடல் மற்றும் மாறுபாட்டின் படி மாறுபடும்.

# கெஜ்ரிவாலின் ஜாமீன் மனு தீர்ப்பு: டெல்லி கோர்ட்டில் ஒத்திவைப்பு




*சென்னை, ஜூன் 20, 2024:* ஜாமீன் கோரி கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை டெல்லி கோர்ட் ஒத்திவைத்துள்ளது.

மதுபானக் கொள்கை முறைகேடு தொடர்பான பணமோசடி வழக்கில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு வரும் ஜூலை 3ந்தேதி வரை நீதிமன்ற காவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி டெல்லி கோர்ட்டில் கெஜ்ரிவால் மனு தாக்கல் செய்தார். இந்த மனு சிறப்பு நீதிபதி நியாய் பிந்து முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, மனுதாரர் மற்றும் அமலாக்கத்துறை தரப்பு வாதங்களை பதிவு செய்து கொண்டார். இதையடுத்து ஜாமீன் கோரி கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை நீதிபதி ஒத்திவைத்தார்.

# 'நீட்' தேர்வுக்கு முதல்நாளே வினாத்தாள் கிடைத்தது: மாணவர்கள் வாக்குமூலம்




*சென்னை, ஜூன் 20, 2024:* சமீபத்தில் நடந்து முடிந்த நீட் தேர்வில், முறைகேடு நடந்ததாக தொடரப்பட்ட வழக்கில் பீகாரில் கைது செய்யப்பட்ட 3 மாணவர்கள் தேர்வுக்கு முந்தைய நாள் வினாத்தாள் தங்களுக்கு கிடைத்தது என வாக்குமூலம் அளித்துள்ளனர்.

மே 5ம் தேதி 24 லட்சம் மாணவர்கள் எழுதிய நீட் தேர்வில் வினாத்தாள் கசிந்ததாக சர்ச்சை எழுந்தது. மேலும் கருணை மதிப்பெண் வழங்கப்பட்டதில் குளறுபடி எழுந்தது. நீட் தேர்வு சர்ச்சை தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அப்போது, கருணை மதிப்பெண் ரத்து செய்யப்படுவதாகவும், அவர்களுக்கு மறு தேர்வு நடத்தப்படும் என மத்திய அரசு அறிவித்தது. இந்த தேர்வில் நடந்த குளறுபடி தொடர்பாக பீகாரில் 3 மாணவர்கள் மற்றும் மாநகராட்சி இளநிலை பொறியாளர் ஒருவரை போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் போலீசில் அளித்த வாக்குமூலத்தில் கூறியதாவது: நீட் தேர்வுக்கு முந்தைய நாளே வினாத்தாள் கிடைத்தது. அதனை நன்கு படித்து தேர்வுக்கு தயாரானோம். இதில் இருந்த கேள்விகளே, மறுநாள் தேர்வு எழுத சென்ற போது கேட்கப்பட்டு இருந்தது என்றனர்.

இந்த நிலையில் நீட் தேர்வு முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்ட மாணவர் அனுராக் யாதவ் கையொப்பமிட்ட வாக்குமூல கடிதம் ஒன்று இணையத்தில் பரவி வருகிறது. அதில் தேர்வுக்கு முந்தைய நாள் எனது மாமா மூலம் கிடைத்த வினாத்தாளும், தேர்வின் வினாத்தாளும் ஒன்றுதான் என்று தெரிவித்துள்ளார்.

மாணவர் அனுராக்கின் மாமாவான பிகார் டான்பூர் நகர அவையில் பொறியாளராக பணிபுரியும் சிக்கந்தர் பிரசாத் யாத்வேந்து மூலம் தான் தேர்வுக்கு முன்னதாகவே விடையுடன் வினாத்தாள் கிடைத்ததாக மாணவர் வாக்குமூலம் அளித்துள்ளார். இதற்கிடையே, நேற்று முன் தினம் நடைபெற்ற யுஜிசி நெட் தேர்வில் முறைகேடு நடந்துள்ளதாக கூறி தேசிய தேர்வு முகமை நெட் தேர்வை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது நாடு முழுவதும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.